2010 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

123—

ஆரம்ப சுகாதார நிலையம்

***91964**—**திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் நகராட்சி, சுகுணாபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கைப்படி இரண்டு சுகாதார நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால் கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், 7–வது வார்டு சுகுணாபுரம் கிராமம் மற்றும் 10–வது வார்டு சுகுணாபுரம் கிராமத்திற்கும், சுண்டக்காமுத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் முறையே 5 மற்றும் 4 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால் 7–வது வார்டு மற்றும் 10–வது வார்டு சுகுணாபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதிக்குட்பட்ட குனியமுத்தூர் நகராட்சி, சுகுணாபுரத்தில் நகராட்சி சுகாதார நிலையம் அல்லது நகராட்சி மருத்துவமனை அமைக்கலாம். ஏனென்றால், சுகுணாபுரத்தில் மட்டும் 7,000 மக்கள் வசிக்கின்றார்கள். அருகில் குறிச்சி நகராட்சி

[2010 ஏப்ரல் 30

பிள்ளையார்புரம், B.K. புதூர், சத்யா நகர் போன்ற பகுதி மக்கள் பயனடைவார்கள். அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 2005–2006 ஆம் ஆண்டு B.K. புதூர், சுகுணாபுரம், சுண்டக்காமுத்தூர், ராமசெட்டிபாளையம், இடையர்பாளையம், குளத்துப்பாளையம் போன்ற பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சி வந்த பிறகு, நான்கு வருடத்தில் எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் கேட்கிறாரா அல்லது புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கேட்கிறாரா என்பது தெரியவில்லை. அவர்களுடைய ஆட்சி காலத்தில் இடம் ஒதுக்கப்பட்டு, தற்போது அந்தப் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் கட்டடங்களில் இயங்கவேண்டும் என்று உத்தரவிட்டு, தற்போது 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கேள்விக்குப் பதிலாக, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.*

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.*

திரு. சு.ப. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குனியமுத்தூர் நகராட்சி, சுகுணாபுரத்தில் நகராட்சி மருத்துவமனையை அமைக்க வேண்டும். பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் அதற்காக 6 இலட்சம் ரூபாயை*

2010 ஏப்ரல் 30]

ஒதுக்கியுள்ளார். துறையின் மூலமாக மருத்துவர்களை நியமித்துத் தர வேண்டும். சுண்டக்காமுத்தூர் முதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை நகராட்சி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். அதேபோல, கட்டடமும், சுகாதார மையமும் அமைக்கவேண்டும். சுண்டக்காமுத்தூர் மருத்துவமனையில் கூடுதல் வசதிகளைச் செய்து தரவேண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு.ப. வேலுமணி, நீங்கள் demand-ல் பேசவில்லை. கேள்வி கேட்பதைவிட்டு, அங்கே அது வேண்டும், இங்கே இது வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். Demand-ல் பேசுகிற மாதிரி பேசாதீர்கள். கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) சுண்டக்காமுத்தூருக்கான கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. சு.ப. வேலுமணி: கேள்விக்கு சம்பந்தப்பட்டதுதான். 108 ஆம்புலன்ஸை எல்லா இடத்திற்கும் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் பேசும்போது, அது முதல்வரின் சாதனை என்று சொன்னார்கள். ஆனால், முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. அன்புமணி ராமதாஸ் அவர்கள், நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று சொல்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

124—

தொழிற்சாலை

***111482—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மூலிகைகள் மூலம் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?